புதிய பாடத்திட்டம்

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல் 2020.

பயிற்சிப்பரீட்சை – 09

5

ஆசிரியர்- பொ.சிவபாதம்.
9/5, கலைவாணி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்

45 நிமிடம்

வினாத்தாள் I

சுட்டெண்.....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளிலே 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்குமான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான வினாக்களின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப்புள்ளிகள்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (.....) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு ஏற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர். மதிப்பிட்ட வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	..... பெயர் ..... ஒப்பம்
பிரதான பரீட்சகர்	

ஆரணி பதிப்பகம், 141/10, கண்டி வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

பக்கம் 2 ஐப் பார்க்க

www.kedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

- 1, 2 ஆகிய வினாக்களில் உள்ள அடைப்புக்களில் இருக்கும் கூட்டத்துடன்சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

1. 

(1)  (2)  (3) 




2. 

(1)  (2)  (3) 

- 3, 4 ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளும் உபகரணங்களும் ஒரு குறித்த இயல்புக்கேற்ப இருகூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடை யாது?

3. A  B  C  D 

(1) AC, BD (2) AD, BC (3) DC, AB

4.  A  B  C  D  E  F

(1) B, E, A, C, F, D (2) A, D, B, C, E, F (3) B, E, C, F, A, D

- 5, 6 ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

5. நீ, நீங்கள் முன்னிலை போன்று நான், நாங்கள் ..... ஆகும்.
(1) ஒருமை (2) படர்க்கை (3) தன்மை

6. பேருந்து, மோட்டார் வாகனம் எரிபொருள் போன்று சைக்கிள், பல்லக்கு .....
(1) எண்ணெய் (2) மனித வலு (3) காற்றுச் சக்தி

7. தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் ஒன்று ஏனைய இரண்டு உருக்களிலிருந்து வேறுபட்டது. வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க..

(1)

A	A
C	C
p	q

(2)

M	M
O	O
T	T

(3)

B	B
H	H
E	E

www.ikedu.lk

சுட்டெண்:- .....

- பின்வரும் கவிதையை வாசித்து 8, 9 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

பச்சைத் தேரை பிடில் வாசிக்க
பனைமரத் தேரை குழலூத
மொட்டைத் தவளை நாட்டியமாட
மோசங்கு கேட்குது ஞொய் ஞொய் ஞொய்

8. இக்கவிதையில் குறிப்பிடப்படும் பிராணி யாது?

(1) ஆமை (2) தவளை (3) தேவாங்கு

9. பச்சைத் தேரை ⟶ பனைமரத்தேரை ⟶ மொட்டைத் தவளை என்பன செய்யும் சேட்டைகளை முறையே தெரிவு செய்க

(1) பிடில் வாசிக்க ⟶ தேரை நாட்டியமாட ⟶ தவளை நாட்டியமாடி குழலூத
(2) பிடில் வாசிக்க ⟶ தவளை நாட்டியமாட ⟶ தேரை குழலூத
(3) பிடில் வாசிக்க ⟶ குழலூத ⟶ நாட்டியமாட

10. வீதியில் சென்ற அனைவரும் குடைபிடித்துச் சென்றனர். நான் குடைபிடித்துச் செல்லவில்லை. ஆனாலும் நான் நனையவில்லை ஏன்?


(1) நான் மற்றயவரின் குடைபிடித்துச் சென்றேன்.
(2) எனக்கு மட்டும் மழை பெய்யவில்லை.
(3) மழை பெய்யவில்லை வெயில் எறித்தது.

- ஒரு பிள்ளை நாற்று மேடையிலிருந்து வாங்கிய மரக்கன்றுகள் பற்றிய பின்வரும் விவரத்தை முன்வைத்தான்.

கொடியில் காய்க்கும் மரக்கன்று – 15	மரத்தில் காய்க்கும் பழ மரக்கன்று – 12
திராட்சை கன்றுகள் - 10	மாங்கன்றுகள் - 7

11. இதன்படி அவன் வாங்கிய மொத்த கன்றுகள் எத்தனை

(1) 27 (2) 44 (3) 15

12. 

இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

(1) 11 (2) 12 (3) 15

13. கமல் ஏனையவருக்கு எப்போதும் தீமையே செய்து கொண்டிருப்பார். இதன் காரணமாக அவன் தொடங்கும் எந்தக் காரியமும் தீமையிலே முடியும். இச் சந்தர்ப்பத்துடன் தொடர்பான பழமொழி யாது?


(1) பேராசை பெரு நட்டம்
(2) முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
(3) விளையும் பயிரை முளையில் தெரியும்.

14. கமல், அமல், விமல், நிமல், நிமலன் என்ற ஐந்து மாணவர்களில் இருவரை ஆசிரியை தெரிவு செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியை அதனை ஒன்றிலிருந்தொன்று வேறுபட்ட எத்தனை வழிகளில் செய்யலாம்?

(1) 20 (2) 12 (3) 10


www.lkedu.lk


15. கீழே தரப்பட்டுள்ள வடிவத்தின் சிறிய சதுரத்தின் பரப்பளவு 1 cm^2 எனின் இவ் வடிவத்தை சதுரமாக்க தேவையான அடைப்புக்களின் எண்ணிக்கையின் மொத்த சதுர சென்ரிமீற்றர் யாது?




(1) $5cm^2$ (2) $9cm^2$ (3) $10cm^2$

16. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணை தெரிவு செய்க.







(1) 2 (2) 3 (3) 4

17. பின்வரும் உரு நிரையில் உள்ள கோலத்திற்கு ஏற்ப இரு வெற்றிடங்களிலம் இருக்கவேண்டிய உருக்கள்?



(1)  (2)  (3) 

18.

2	4	8
4	X	16
Y	16	32

இங்கு X, Y ஆகியவற்றின் பெறுமானங்கள் முறையே

(1) 8, 6 (2) 8, 8 (3) 8, 4

- R = 2 , S = 3 , T = 4 , U = 5 , V = 6 எனக்கொண்டு 19ஆம் 20ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

19. T+ U = ?

(1) V+ U – R (2) V + U - T (3) V+ T- U

20.

U U R

R R V –

(1) S S V
(2) R S V
(3) S R V

www.lkedu.lk

21. ஜனவரி, ஏப்ரல், யூன், செப்ரம்பர், நவம்பர் என்பவற்றில் பொருந்தாத சொல்லைத் தெரிவு செய்க.

(1) ஜனவரி (2) நவம்பர் (3) யூன்

22. தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் ஓர் உரு மற்றைய இரு உருக்களிலிருந்தும் வேறுப்டடது. அவ் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.

(1) **B C** (2) **S L S** (3) **H H**

23. அபியும் நானும் ஒரு வட்ட ஓட்டப் பந்தயப் பாதையில் ஓட்டத்தை ஆரம்பித்தோம். அபி அரைச்சுற்று ஓடும்போது நான் ஒரு சுற்றை ஓடிமுடித்து முன்னோக்கி வந்து அபியைக் கடந்தேன். இதற்கேற்ப பிழையான கூற்று.

(1) என்னுடைய கதி அபியின் கதியின் மூன்று மடங்காகும்.


(2) என்னை விட அபி வேகமாக ஓடக் கூடியவர்.




(3) என்னையும் அபியையும் ஒப்பிடும்போது யார் வேகமாக ஓடக்கூடியவர் என தீர்மானிக்க முடியும்.


24. கரனிடம் இரண்டு ரூபாய் நாணயங்களாகவும் ஐந்து ரூபாய் நாணயங்களாகவும் ரூ. 23 உள்ளது. அதில் இருக்கத்தக்க இரண்டு ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?




(1) 3 (2) 4 (3) 6

- 25, 26 ஆம் வினாக்களில் கோலத்திற்கேற்ப அடுத்துவரும் பொருத்தமான உருவை தெரிவு செய்க.

25.  .....

(1)  (2)  (3) 

26.  .....

(1)  (2)  (3) 


27. 1 தொடக்கம் 5 வரை எழுதும்போது வரும் எண்களின் கூட்டுத்தொகை தொடர்பான சரியான கூற்று?

(1) ஓர் இரட்டை எண்ணாக அமையும்.

(2) ஓர் ஒற்றை எண்ணாக அமையும்.

(3) சதுர எண்ணாக அமையும்.

28. பின்வரும் உருக்களில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்கவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க?




(1) 9 (2) 6 (3) 4

29. நீளம், அகலம், உயரம் ஆகியன 1cm வீதம் உள்ள ஒரு மரச் சதுரமுகியிலிருந்து நீளம், அகலம், உயரம் ஆகியன 1cm வீதம் உள்ள எத்தனை சதுரமுகிகளை வெட்டலாம்?

(1) 1 (2) 5 (3) 125

30.



எனின்



இன் றெமானம் யாது?

(1) 4 (2) 8 (3) 14

31. ஒரு பிள்ளை அதன் வயது 10, 16 ஆக இருக்கும்போது பிரபலமான இரு பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும் அமல், கமலிலும் பார்க்க ஐந்து வயதினால் மூத்தவன். அமல் முதலாவது பரீட்சைக்கு 2017 ஆம் ஆண்டில் தோற்றுவாராயின் கமல் இரண்டாவது பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய ஆண்டு எது?

(1) 2028 (2) 2022 (3) 2032

32. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க?

ஊசி – நூல் எனின் உரல் - .....

(1) துடுப்பு (2) அம்மி (3) உலக்கை


www.lkedu.lk

33. பின்வரும் உருவில் உள்ள எண்கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க?

3	24	21	18
6	9	12	-----
3	9	6	12

(1) 14 (2) 24 (3) 15

34. இவ்வுருவுடன் தொடர்புபட்ட சரியான கூற்றைத் தெரிவு செய்க.



(1) பகுதி A ஆனது சிவப்பு, நீலம், மஞ்சள் என்னும் மூன்று நிறங்களுக்கும் உரியது.

(2 B, C ஆகிய பகுதிகள் மஞ்சள் நிறமுள்ளவை.

(3) பகுதி C நீல நிறமாக இருக்கும் அதேவேளை பகுதி D சிவப்பு நிறமானது.


35.



கலை வீட்டிலிருந்து பாடசாலை நோக்கி செல்லும்போது வலது புறம் திரும்பிய தடவைகள் எத்தனை?

(1) 6 (2) 5 (3) 4

- ஓர் அடைப்பின் ஒரு பக்கத்தின் நீளம் 10 மீற்றர் ஆக இருக்குமாறு வரையப்பட்டுள்ள ஒரு பாதை கீழே நெய்யரியில் காணப்படுகின்றது.



36. மேற்குறித்த பாதை நெய்யரியில் கமலா Aயிலிருந்து Dயினூடாக Bயிற்கும் முரளி Bயிலிருந்து Cயினூடாக Aயிற்கும் பயணம் செய்தனர். இதற்கேற்ப

(1) கமலாவும் முரளியும் ஒரே அளவு தூரத்திற்குப் பயணம் செய்துள்ளனர்.

(2) முரளி கமலாவிலும் கூடுதலான தூரம் பயணஞ் செய்துள்ளனர்.

(3) இருவரும் பயணஞ் செய்துள்ள மொத்தத் தூரம் 220 மீற்றர் ஆகும்.

37. மேற்குறித்த பாதை நெய்யரியில் Aலிருந்து Cயினூடாக Eவரையுள்ள மிகக்குறுகிய தூரம்

(1) 50m (2) 90m (3) 100m

38. சரியான கோவையைத் தெரிவு செய்க.

(1) 888 + 88 + 88 + 8 + 8 = 1000

(2) 888 + 88 + 8 + 8 + 8 = 1000

(3) 888 + 88 + 88 + 8 + 8 + 8 = 1000

39. இன்று ஞாயிற்றுக்கிழமை, நேற்று முன்தினத்துக்கும் (முந்தையநாள்) கடந்த திங்கட்கிழமைக்குமிடையே எத்தனை நாட்கள் இருந்தன?

(1) 1 (2) 2 (3) 3

40. இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையைத் தெரிவு செய்க.

(1) 52346 = 38762

(2) 53476 = 24356

(3) 12345 = 23456


****

www.lkedu.lk

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல். 2019



பயிற்சிப்பரீட்சை – 09



ஆசிரியர்- பொ.சிவபாதம்.
9/5, கலைவாணி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்

1 மணித்தியாலம் 15 நிமிடம்	**வினாத்தாள் II**	சுட்டெண்.....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுங்கள்.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளிலே 58 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்குமான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான வினாக்களின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப்புள்ளிகள்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (.....) புள்ளிகள் வழங்கும் திட்டத்திற்கு ஏற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	..... பெயர் ..... ஒப்பம்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர். மதிப்பிட்ட வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்	..... பெயர் ..... ஒப்பம்
மேற்பார்வையாளர்	

ஆரணி பதிப்பகம், 141/10, கண்டி வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரி. 0779235807

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

(1) தரப்பட்ட பாடலை நன்றாக வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

வண்ண வண்ணப் பூக்களாய்
வானில் சிதறும் தீப்பொறி
விண்ணில் வான வேடிக்கை
விழா வென்றாலே வாடிக்கை

வில்லிருந்து அம்பு போல்
வேகமாக உயரமாய்
செல்லும் காட்சி அழகுதான்
சிதறும் வெள்ளிப் பூக்கள் தான்.

i. பாணம் என்பதன் ஒத்தகருத்தைத் தரும் சொல்லினை பாடலிலிருந்து தெரிவு செய்க.?
.....

ii. பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமானம் யாது?. .....

iii. விசிறியும் சுழியும், ஒற்றைக்கொம்பும் அரவும், விசிறி இடம்பெற்றுள்ள சொல்லைத் தெரிவு செய்க. .....

iv. அடுக்குமொழிச் சொல்லைத் தெரிவு செய்து எழுதுக. .....

v. 'விழாவென்றாலே' என்பதைப் பிரித்து எழுதுக. .....

vi. அ.ஃறிணைத் பன்மைப் பெயர்ச் சொல்லைத் தெரிவு செய்க. .....

(2) சுமதியின் அண்ணன் பொது அறிவு வினாக்களுக்கு விடைகூறுவதில் கெட்டிக்காரன், அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒரு நாள் சுமதியின் வீட்டிற்கு வந்த நண்பியின் தங்கை கேட்ட பொது அறிவுக் கேள்விக்கு சுமதியின் அண்ணனால் விடை கூறமுடியவில்லை. இச் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான பழமொழியின் கீழ்க் கோடிடுக.

1. நிறைகுடம் தளம்பாது.
2. ஆனைக்கும் அடி சறுக்கும்.
3. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

(3) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

i. நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி உயிர்வாழ வேண்டுமானால் .....உணவுகளைத் தவிர்க்க வேண்டும். (ஊன்/ ஊண்)

ii. சில குழந்தைகளுக்கு அடிக்கடி வயிற்று .....உண்டாவது வழமையாகும்.(வளி/வலி)

iii. "நுட்பம்" என்ற சொல்லுக்குரிய உயிர்க்குறியாக அமைவது.(கீழ்க்கால்/ மடக்கேறு)

iv. தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் ..... ஆவான். (வாக்காளர்/ வேட்பாளர்)

v. அரண்மனையில் பெண்களுக்கு என ஒதுக்கப்பட்டிருக்கும் இடம் .....(ஆச்சிரமம்/ அந்தப்புரம்).

vi. வறுமையில் உள்ள கமலுக்கு விமல் தோள் கொடுத்தான் என்பதன் கருத்து ..... (உதவுதல் / விரைவாக)

www.kedu.lk

சுட்டெண்- ……..

vii. மான் - கலை என்பது போல குதிரை ……. ஆகும். (வடவை/ குண்டு)

viii. எல்லா வினாக்களினதும் சரியான விடைக்கு (✓) அடையாளத்தையும் பிழையான விடைகளுக்கு (×) அடையாளத்தையும் உரிய கூடுகளுக்குள் இடுக. என்பது ……. ஆகும். (அறிவித்தல் / அறிவுறுத்தல்)

(4) பின்வரும் பழமொழிகளின் கருத்தினை எழுதுக.

i. அரசன் எவ்வழி குடியானவன் அவ்வழி

……

ii. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

……

(5) பின்வரும் பாடல் வரிகளின் இடைவெளியை நிரப்புக.

பஞ்சு போன்ற உடலைத் தடவிப்

……

கொஞ்சிப் பேசிக் கூடி ஆடிக்

குதிக்க வேண்டும் அம்மா.

(6) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அடைப்பினுள்ளே கூறுக.

i. "யாம்" உயர்திணைப் பன்மைச் சொல்லாகும். (……)

ii. "ஓடியது" அ.·.றிணைப் பன்மை வினைச் சொல்லாகும். (……..)

(7) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறியீடுகளை இடுக.

அதிபர் ஆசிரியர் மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் எல்லா வகுப்பினரும் வந்திருந்தனர்.

(8) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை எழுதுக.

ஓட்டையுள்ள ஊசி
ஒல்லியான ஊசி
தைக்கும் நல்ல ஊசி
தரம் வாய்ந்த ……!

(9) இங்கனம் என்பதனை சரியான எழுத்துவழக்கில் தருக. ……..

(10) பின்வரும் சிங்களச் சொல்லின் தமிழ் கருத்தை எழுதுக.

பந்தி (B)பார கு(G)று(த்)துமா ……..


(11) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

அம்மா சமைத்து முடித்து விட்டாரா?

……..

(12) i. கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

sick room - …….

ii.  உருவில் தரப்பட்டுள்ள உயிரினத்தின் ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்தில் தருக. ……

www.lkedu.lk

❖ தரப்பட்டுள்ள புள்ளிக்கோடுகளில் விடையினை எழுதுக.

(13) 63276 என்னும் எண்ணை எழுத்தில் எழுதுக.

……..

(14)

5	10
15	25
20	30
35	40

இவ் எண்களில் 5, 6 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண் யாது?


……

(15) கீழே தரப்பட்ட எண்ணிற்கு முந்திய பிந்திய எண்களை உரோமன் எழுத்துக்களில் தருக.

……. 16 ……..

(16) சீமெந்து விற்பனை நிலையம் ஒன்றிற்கு 740 சீமெந்துப் பக்கெற்றுக்களைக் கொண்டு வரவேண்டியுள்ளது. சீமெந்துப் பக்கெற்றுக்கள் கொண்டுவரும் வாகனத்தில் ஏற்றக்கூடிய சீமெந்துப் பக்கெற்றுக்களின் உயர் எண்ணிக்கை 24 ஆகும். இதற்கேற்ப வாகனத்தில் எத்தனை தடவைகள் சீமெந்துப் பக்கெற்றுக்கள் கொண்டு வரவேண்டியுள்ளது?

……..


(17) 

i. உருவில் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பங்கு? ……

ii. இவ் உருவில் $\frac{1}{2}$ பகுதி நிழற்றப்படவேண்டுமாயின் இன்னும் நிழற்றப்படவேண்டிய கட்டத்தை நிரப்புக. ……

(18) $\frac{3}{6}$, $\frac{7}{12}$, $\frac{5}{12}$, $\frac{2}{4}$, $\frac{1}{2}$ சமனான பின்னங்களைத் தெரிவு செய்து எழுதுக. ……

(19) பின்வரும் வரிப்படத்தை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.



i. இவ்வுருவில் செங்கோணத்தை விட குறைந்த கோணங்களைக் காட்டும் ஆங்கில எழுத்துக்கள் எவை? ……

ii. செங்கோணத்தைக் காட்டும் ஆங்கில எழுத்துக்கள் எவை? ……

(20) ஒரே அளவுடைய ஆறு முகங்களும் 12 விளிம்புகளும் 8 உச்சிகளும் உடையதும் நேரான விளிம்பு, சமமான சதுர வடிவ முகம் என்னும் பண்புகளை கொண்டதுமான திண்ம உரு யாது? ……


(21) 4×400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் குறிப்பிட்ட குழுவில் வீரர்கள் எடுத்த காலம் பின்வருமாறு.

	நிமிடம்	செக்கன்
முதலாவது வீரர் எடுத்த நேரம்	1	08
இரண்டாவது வீரர் எடுத்த நேரம்	1	02
மூன்றாவது வீரர் எடுத்த நேரம்	0	52
நான்காவது வீரர் எடுத்த நேரம்	0	48

இப்போட்டியை முடிப்பதற்கு நான்கு வீரர்களுக்கும் எடுத்த மொத்த நேரத்தைக் காண்க?

……

www.lkeduk

(22) 

செவ்வகத்தின் சுற்றளவு யாது?

.....

(23) ஒரு வகைப்பூச்சு 250ml, 500ml, 1l, 2l, 4l என ஐந்து வகை கொள்கலன்களில் விற்பனை செய்யப்படுகின்றது.

i. 1l பூச்சு வாங்க உத்தேசிக்கும் ஒருவர் அதனை கொள்வனவு செய்யக்கூடிய இரு முறைகள் எவை?

....., ...

ii. வாரம் ஒன்றில் விற்பனையான பூச்சுக்களின் அளவு முறையே 1l கொள்ளளவுடைய 4 கொள்கலன்கள் 2l கொள்ளளவுடைய 3 கொள்கலன்கள், 500 ml கொள்ளளவுடைய 7 கொள்கலன்கள் 250 ml கொள்ளளவுடைய 2 கொள்கலன்கள் ஆகும். அவ் வாரத்தில் விற்பனை செய்யப்பட்ட பூச்சின் மொத்த அளவை தருக?

.....லீற்றர்


(24) ஒரு தந்தை தனது பிள்ளைகளான அகில், அமர் ஆகிய இருவருக்கும் தனது காணியில் 0.75 பங்கை வழங்கினார். அகிலுக்குக் கிடைத்த காணி 0.48 பங்கு எனின் அமருக்கு கிடைத்த காணியின் பங்கு யாது?

.....

(25) இடைவெளியினை நிரப்புக.

i. வடக்குக்கும் கிழக்குக்கும் இடையில் உள்ள செங்கோணத்தை இரண்டு சமபங்குகளாகப் பிரிக்கும் திசை ..... ஆகும்.

ii. ..... இடையில் உள்ள செங்கோணத்தை இரண்டு சமபங்குகளாகப் பிரிக்கும் திசை வடமேற்கு ஆகும்.

(26) 

இவ் உருவிற்கு வரையக்கூடிய சமச்சீர் அச்சுக்கள் எத்தனை?

.....

❖ 27 தொடக்கம் 57 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

(27) இளஞ்சிவப்பு நிறத்தளிர், நான்கு இதழ்ப்பூ வெள்ளை நிறப்பூ என்னும் பண்புகளை கொண்ட தாவரம்

1. நாவல் 2. பனை 3. வெற்றிலை 4. நாகமரம்

(28) ஒரு வித்தினைக் கொண்டதும் வருடத்தில் ஒரு தடவை பயனைத் தருவதுமான தாவரம்.

1. தென்னை 2. மங்குஸ்தான் 3. மரமுந்திரிகை 4. தோடம்

(29) தாவரங்கள் செழிப்புடன் வளர்வதற்கு பங்களிப்பு செய்யும் விலங்கு **அல்லாதது.**

1. மண்புழு 2. வெட்டுக்கிளி 3. கறையான் 4. செண்பகம்

www.lkedu.lk

(30) ஒரு குறித்த காலத்தில் பூக்கள் பூக்கும் தாவரமும் அதன் மாதமும் சரியாக அமையாத விடை எது?

1. பங்குனி – பாலை
2. சித்திரை – முருங்கை
3. வைகாசி – ஓர்க்கிட்
4. ஐப்பசி - இலுப்பை

(31) மழை காலங்களில் பெரும்பாலும் பரவலடையும் வித்து

1. எருக்கலை 2. காசித்தும்பை 3. தென்னை 4. புலிநகம்

(32) சுதேச ஆக்கங்களைக் கொண்ட தொகுதி

1. தென்னஞ் சிரட்டை, அகப்பை, பனையோலைப் பாய், தென்னந்தும்புக் கயிறு, பனையோலைப் பெட்டி
2. சிரட்டைப் பூச்சாடி, பனையோலைப் பாய், தென்னந்தும்புக் கயிறு, பிளாஸ்ரிக் பெட்டி
3. தென்னந்தும்புக் கயிறு, பிளாஸ்ரிக் கரண்டி, பனையோலைப் பாய், , பனையோலைப் பெட்டி
4. பிளாஸ்ரிக் பூச்சாடி, ஓலைப் பாய், தென்னந்தும்புக் கயிறு, பிளாஸ்ரிக் பெட்டி

(33) சிங்கராஜவனம் அமைந்துள்ள மாவட்டம்

1. குருநாகல் 2. கண்டி 3. கொழும்பு 4. பதுளை

(34) உணவு வகைகள் வீணாவதைக் குறைக்கும் பொருட்டு உணவு வகைகளை பாதுகாத்து வைப்பதற்கு உலர வைக்காத உணவு.

1. பனங்கிழங்கு 2. ஈரப்பலாக்காய் 3. பலாக்காய் 4. எலுமிச்சை

(35) இலங்கைத் திருநாட்டில் மூன்று, இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட மாகாணங்களை முறையே தருக

1. கிழக்கு, மேல்
2. வடமத்திய, மத்திய
3. தென், ஊவா
4. வட, வடமேல்

(36) சமூகவிரோத செயலாக அமைவது.

1. சிறுவர்களைப் பாடசாலைக்குச் செல்லச் செய்தல்..
2. போதைப் பொருளைக் கொண்டு செல்லல்.
3. பெரியவர்களின் பண்புகளைப் பின்பற்றல்.
4. நாட்டின் நற்பிரஜையாக உருவாகுதல்.

(37) மலேசியா, தாய்லாந்து இலங்கைக்கு எத்திசையில் அமைந்துள்ளது?

1. கிழக்கு 2. வடக்கு 3. தெற்கு 4. மேற்கு

(38) இலங்கைக்காக ஒலிம்பிக் போட்டியில் பதக்கங்களைப் பெற்றவர்கள்




1. டங்கன் வைட், தீபிகா சண்முகம்
2. சிந்து, டங்கன் வைட்
3. சுசந்திகா ஜயசிங்க, டங்கன் வைட்
4. தீபிகா சண்முகம், சுசந்திகா ஜயசிங்க

(39) மனிதன் தனது தேவைக்காக பொதுவாக பயன்படுத்தும் பொருட்கள் கொண்ட விடைத் தொகுதி

1. தொலைபேசி, பேனை, சீப்பு, கதிரை
2. குடை, பற்தூரிகை, சீப்பு, கதிரை
3. தொலைபேசி, கதிரை, பேனை, தொலைக்காட்சி
4. மேசை, மூக்குக்கண்ணாடி, சவர்க்காரம், கொப்பி

(40) "மங்கையர் எல்லோரும் வாருங்கடி" என்ற பாடல் எவ்வகைப்பாடல்
1. கோலாட்டப்பாடல் 2. கரகாட்டப்பாடல்
3. அருவி வெட்டுப்பாடல் 4. கும்மிப்பாடல்

(41) கீழே தரப்பட்டுள்ள உருக்களில் வேட்டைக்காரன் (ஓராயன்) உடுத்தொகுதியைக் காட்டும் உரு எது?





1. 
2. 
3. 
4. 

(42) வீடுகளில் நாளாந்தம் வேலைகளுக்காக காற்றுச் சக்தியைப் பயன்படுத்தும் சற்தர்ப்பமாக **அமையாதது**
1. அடுப்பில் தீ மூட்டும்போது.
2. ஈரஉடுப்புக்களைக் காய வைக்கும் போது.
3. நெல்லிலிருந்து பதரை நீக்கும் போது.
4. வெப்பத்துக்கு மின் விசிறியை பயன்படுத்தும் போது.

(43) "சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் - வேறு
வேறு சிறிய இனத்து மாந்தர்களும்
இங்குள்ள சகல மதத்தவரும் சேர்ந்து
இன்புற்று வாழும் பெருநாடு..." இப்பாடலில் குறிப்பிடப்படும் இனத்தவர்களின் மதங்கள் முறையே
1. பௌத்தம், இஸ்லாம், இந்து சமயம் 2. இஸ்லாம், இந்து சமயம், பௌத்தம்
3. பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவ சமயம் 4. பௌத்தம், இந்து சமயம், இஸ்லாம்

(44) பூனை மூலம் நோய்க்கிருமிகள் மனித உடலினுள் செல்வதனால் ஏற்படக்கூடிய நோய்
1. நீர்வெறுப்பு 2. கொள்ளை நோய் 3. டெங்கு 4.மஞ்சட் காய்ச்சல்


(45) 6m உயர்ந்த தூண் ஒன்றிலிருந்து 1kg நிறையுடைய இரும்புக்குண்டும் $\frac{1}{2}$ kg நிறையுடைய இரும்புக்குண்டும் சம நேரத்தில் கீழே எறியப்பட்டதெனின் சரியான உருவினைத் தெரிவு செய்க.

1. 
2. 
3. 
4. 

(46) நுளம்பு தொடர்பான **தவறான** கூற்று
1. நுளம்பின் மூலம் டெங்கு, மலேரியா, சிக்கின்குன்யா, யானைக்கால் போன்ற நோய்கள் ஏற்படலாம்.
2. தேங்கிய நீரில் நுளம்புகள் பெருகுகின்றன.
3. சூழலினை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் நுளம்புகளைக் கட்டுப்படுத்த முடியும்.
4. நுளம்பினால் ஏற்படும் நோயினால் உயிர் இழப்பு ஏற்படுவதில்லை.

(47) தேவநம்பியதீஸ மன்னன் கட்டிய குளம்
1. மின்னேரியா 2. திஸ்ஸவாவி 3. அபயவாவி 4. கலாவாவி

(48) தரம் 05 வகுப்பு மாணவர்கள் தளவாடி ஒன்றினை நீருள்ள பாத்திரத்தில் படத்தில் காட்டியுள்ளவாறு வைத்து தளவாடியில் சூரிய ஒளிபடுமாறு வைத்தனர். இச் செயற்பாட்டினை அவர்கள் மேற்கொண்டமைக்கான காரணம் யாது?
1. சூரியனை அவதானிப்பதற்கு
2. சூரியனின் வெப்பத்தை அறிவதற்கு
3. சூரிய ஒளியிலுள்ள நிறங்களை அவதானிப்பதற்கு
4. நேரத்தை அறிவதற்கு



(49) என் வகுப்பிலுள்ள நண்பர்களுக்கு எனது மன நிம்மதியைப் பகிர்ந்து வழங்குவதற்கு நான் ஆயத்தமாக இருக்கின்றேன். எனது நண்பர்களுக்கும் தோழிகளுக்கும் நிம்மதி கிடைக்கட்டும். எமது வகுப்புக்கும் பாடசாலைக்கும் நான் ஒளி விளக்காவேன். நான் எனது குடும்பத்தினுள் பேரொளி விளக்காவேன். நான் ஒளி விளக்கு போன்று ஒளி கொடுப்பேன். இச்செயற்பாடு மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாம் படி

1. 5ம் படி 2. 2ம்படி 3. 1ம் படி 4. 4ம் படி

(50) கிராமிய விளையாட்டுக்களைக் கொண்ட கூட்டத்தை தெரிவு செய்க?

1. கிளித்தட்டு, பல்லாங்குழி, கபடி, தாயம்
2. டெனிஸ், தாயம் , கபடி, கிளித்தட்டு
3. எல்லே, கொக்கி, காற்பந்தாட்டம், டெனிஸ்
4. சதுரங்கம், கரம், கிளித்தட்டு, கபடி



(51) பின்வருவனவற்றுள் தோற் கருவியாக அமைவது.

1. வீணை 2. தாளம் 3. சங்கு 4. றபான்

(52) மண்ணரிப்பினைக் கட்டுப்படுத்தும் வழிமுறையாக **அமையாதது.**

1. மண்ணின் வளம் குறைவடையும் 2. மரங்களை நாட்டுதல்
3. அணைக்கட்டுக்களைக் கட்டுதல். 4. மேற்பரப்பில் புற்களை வளர்த்தல்

(53) கட்டாயச் சுற்றுவளைவு முன்னால் என்பதனைக் குறிக்கும் படம்

1. 
2. 
3. 
4. 

(54) "சிலோன் நஷனல் றிலீவ்"எனும் சஞ்சிகையின் ஆசிரியரும் தமிழ், பிரெஞ்சு, ஜேர்மன், லத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவர்

1. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 2. கலாநிதி ரீ.பி. ஜாயா
3. சேர் டீ.பி ஜயதிலக்க 4. வண. எஸ். மஹிந்த

(55) இலங்கைக்குரிய மீனினமாக அமைவது

1. புள்ளிக்கோட்டி 2. மரநாய் 3. மரத்தேரை 4. நாகணவாய்

(56) வரை சில்லு பயன்படுத்தப்படுவது

1. வனைதல் தொழிலில் 2. வயல் வேலையில்
3. தையல் தொழிலில் 4. சுரங்கக் கைத்தொழிலில்

(57) அன்னாசிப்பிஞ்சு உண்பதால் ஏற்படக் கூடிய விளைவும் நோயறிகுறியாகவும் அமைவது.

1. வயிற்று வலி ஏற்படுதல்
2. உதடுகள் வீங்குதல்
3. உடலில் தடிப்புக்கள் தோன்றுதல், சொறி ஏற்படுதல்
4. நீர் வெறுப்பு நோய் ஏற்படுதல்.

(58) **மின்சாரத்தை எவ்வாறு சிக்கனமாகப் பயன்படுத்தலாம் என** மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

i. .....
.....

ii. .....
.....

iii. .....
.....

www.ikedu.lk